வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2030 தை 02 ஞாயிற்றுக்கிழமை (16 - 01 - 2000) VALAMPURI ஒலி: 28

16 JAN 2000
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

★ இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில்

# அரசின் தீர்க்கமான முடிவின்பின்பே தென் இலங்கை சர்வமதக் குழுவினர்

## புலிகளுடன் பேச வேண்டும் மன்னார் ஆயர்

(வலம்புரி கொழும்புச் செய்தியாளர்)

**இலங்கை இனப்பிரச்சனை விடயத்தில் தென்பகுதியைச் சேர்ந்த மதத்தலைவர்கள் அரசிற்கு அழுத்தம் கொடுத்து, காத்திரமான ஓர் தீர்வைக் கண்ட பின்பே விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு வன்னி செல்ல வேண்டும்.**

இவ்வாறு மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரிய இராயப்பு ஜோசப் அடிகளார் தெரிவித்தார்.

நேற்றைய தினம் எமது வலம்புரியின் கொழும்புச் செய்தியாளருக்கு அவர் அளித்த செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் அரசிடம் திடமான தீர்வுத் திட்டம் இல்லாமல் சர்வமதக் குழுக்கள் விடுதலைப் புலிகளைச் சந்தித்துப் பேசுவதால் எது வித பயனும் ஏற்படப்போவதில்லை.

இலங்கையின் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணவேண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை நகரசபை மண்டபத்தில் மக்களின் அஞ்சலிக்காகப் பூதவுடல்

(புலோலி)

நேற்று முன்தினம் இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்ட பருத்தித் துறை நகரசபைத் தலைவர் திரு. வ. விஜயரத்தினத்தின் பூதவுடலும், நகரசபை ஊழியர் முதலி பகீரதனின் பூதவுடலும் இன்று காலை 10 மணிக்கு பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஆதார

[6ஆம் பக்கம் பார்க்க]

## நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல்

# மக்கள் சமாதானத்தை விரும்புவதை இத் தேர்தல் எடுத்துக்காட்டுகிறது

**- லலித்கொத்தலாவல**

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் பெரும்பான்மையான மக்கள் வாக்களித்துள்ள விதம் அவர்கள் சமாதானத்தை விரும்புவதை வெளிப்படுத்தியுள்ளது. அரசியல் வாதிகள் அதனை செவிமடுப்பது நல்லது.

இவ்வாறு இலங்கை வர்த்தக சமமேளனப் பிரமுகரும், சிலிங்கோ நிறுவனங்களின் தலைவருமான தேசமான்ய லலித் கொத்தலாவல சென்ற வெள்ளிக்கிழமை களுத்துறை நாகொடையிலுள்ள தேசிய சுகாதார சேவைகள் நிறுவகத்தில் 'கற்றரக்ட்' நோயினால் கண்பார்வையிழந்த 2000 பேரிற்கு இலவச சத்திர சிகிச்சையை மேற்கொள்ளும் திட்டத்தை ஆரம்பித்து வைத்து பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வந்து, வன்முறைகள் இல்லாத அழகிய அமைதியான தேசமொன்றை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்று நம்பிக்கை கொள்வோம் என்றும் கூறினார்.

புதிய நூற்றாண்டில் காலடி எடுத்து வைத்த வேளை சமூகத்திற்குப் பயன்படும் வகையில் ஏதாவது செய்ய வேண்டும் என்று எண்ணிய போதே இந்த இலவச கண் சத்திர சிகிச்சைத் திட்டம் நினைவில் எழுந்தது.

இத்திட்டத்தில் சமூகத்தில் மிகவும் வறிய நிலையில்

(6ம் பக்கம் பார்க்க)

## விஜயரத்தினத்தின் தோள்மூட்டு உட்பட உடலில் நான்கு காயங்கள்!

[புலோலி]

நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்ட பருத்தித் துறை நகர சபைத் தலைவர் விஜரட்ணத்தினதும் ஊழியர் பகீரதனினதும் பிரேத பரிசோதனைகளை பருத்தித் துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் மாவட்ட வைத்திய அதிகாரி வைத்தியக் கலாநிதி கே. மயிலேறும் பெருமாள் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்

அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. விஜயரட்ணத்துக்கு இடது கைத் தோளில் ஒரு காயமும் தோள் பட்டையில்இருகாயங் களும் சொக்குப் பகுதியில்

(6ம் பக்கம் பார்க்க)

## இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னியில் உணவு, மருந்துப்பொருட்களுக்கு தட்டுப்பாடு

வன்னி மாவட்டங்களில் உணவுப் பொருட்களுக்கும் மருந்துப் பொருட்களுக்கும் பலத்த தட்டுப்பாடு நிலவுவதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு எஸ். சுந்தரம் பிரதி அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் சொய்ஸாவை நேற்றுச் சந்தித்து எடுத்துக் கூறினார்.

ஆணையாளரிடம் அரச அதிபர் விடுத்த கோரிக்கையில் கொழும்பில் இருந்து உடனடியாக அரிசி அனுப்பாவிடில் தனியார் வர்த்தக நிலையங்களில் அரிசியின் அதிகரித்த விலையை (ஒரு கிலோ 50 ரூபா, 52 ரூபா) க்கு குறைக்க முடியாது என்று வலி

(6ம் பக்கம் பார்க்க)

## சாரதாம்பாளின் கொலை வழக்கு உடன் விசாரணை செய்ய வேண்டும்

(கொழும்பு)

புங்குடுதீவு இளம் அந்தணப்பெண் சாரதாம்பாளை பாலியல் வல்லுறவுக்குட் படுத்தியபின் கொலை செய்த கடற்படையினரை உடன் கைது செய்யுமாறு ரெலோ அமைப்பைச் சேர்ந்த எம். சிறிகாந்தா அரசாங்கத்தை கோரியுள்ளார்

சாரதாம்பாள் கொலை செய்யப்பட்டு 19 நாட்கள் ஆகியும் இன்று வரைஅக்கொலை தொடர்பாக அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காதது கவலை அளிப்பதாக உள்ளது என்று கூறியுள்ளார்

கைது செப்பப்படும் கடற்படையினர் மூன்று மேல் நீதி மன்ற நீதிபதிகள் முன்னிலையில் டரயல் அட்பார் முறையில் விசாரணைகளை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ரணில் நோர்வே தூதுவர் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் நோர்வேயின் பங்களிப்புக் குறித்து ஆராய்வதற்காகஇலங்கைக்கானநோர்வே தூதுவர் ஜோன் வெஸ்றபோக் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை சந்தித்துப் பேசியுள்ளதாக தெரியவருகின்றது.

இந்தச் சந்திப்பில் விரைவில் கொழும்பு வரவுள்ள நோர்வே வெளிவிவகார அமைச்சர் நட்வோல் பேக் இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக மேற்கொள்ளவுள்ள மத்தியஸ்த முயற்சி குறித்தும் ஆராயப்பட்டது.

## வவுனியா மன்னார் வீதியில் கண்ணி வெடித் தாக்குதல்!

### 6 இராணுவத்தினர் பலி, 9 பேர் காயம்

(வவுனியா)

வவுனியா மன்னார் வீதியில் பூவரசங்குளத்திற்கு அருகாமையில் உள்ள வாரிக்குட்டியூர் அருகில் இடம்பெற்ற கிளைமோர்க் கண்ணி வெடித் தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் பலியானதாகவும் 9 இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

இக்கிளைமோர் கண்ணி வெடித் தாக்குதல் நேற்று மாலை 5 மணியளவில் இடம் பெற்றது,

வவுனியா மன்னார் வீதியில் சென்று கொண்டிருந்த இராணுவ டிரக் வண்டியைக் குறிவைத்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

படுகாயமடைந்த ஒன்பது இராணுவத்தினரும், அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவ டிரக்வண்டி சென்றுகொண்டிருந்த போது அவ்வழியே மோட்டார் சைக்கிளில் சென்ற பொது

(6ஆம் பக்கம் பார்க்க)

## சங்கொலியில் உங்கள் குறை

**அன்பு வாசகர்களே!**

உங்கள் நலன்நாடி வலம்புரி ''சங்கொலியில் உங்கள் குறை'' எனும் பகுதியைத் தினசரி தரவுள்ளது. உங்கள் உள்ளத்தில் எதிரொலிக்கும் பொதுவான குறைகளைத் தவறாது சங்கொலிக்கு எழுதுங்கள். எழுதும் குறைகள் மனித மனத்தைப் புண்படுத்தாமலும், தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களைப் பாதிக்காமலும் இருக்கட்டும்.

**எழுதுங்கள் குறைகளை**

**நிறைவுக்காகச் சங்கொலி ஒலிக்கும்**

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

சுண்டுக்குளி, பிறவுன் வீதி, நாவலர் வீதி ஆகிய இடங்களில் காணிகள் தேவை நல்ல விலை கொடுக்கப்படும். விபரங்களுக்கு தபாலில் தொடர்பு கொள்க.

ஜெலிங் புரொப்பட்டி டெவலப்பர்ஸ் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கைசுண்டுக்குளி.

---

நீண்ட நேரம் வேலை செய்யக் கூடிய ஆங்கில அறிவு உடைய தட்டச்சு அனுபவமுள்ள A.Lபாடத்தில் விசேட சித்தி அடைந்த பெண்கள் தேவை. நேரில் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்க நிர்வாகப் பங்குதாரர் ஜெலிங் புரோப்பட்டி டெவலப்பர்ஸ் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை சுண்டுக்குளி 5 தினங்களுள் விண்ணப்பிக்கவும் விண்ணப்பங்கள் நேரிலும் பெறப்படும்.

தினமும் காலை 10.30 -2.30 வரை மட்டும்.

## சிரமதானப் பணி

(அச்சுவேலி)

கோப்பாய் பிரதேச செயலக ஊழியர்களும் பொது மக்களும் இணைந்து கோப்பாய் பிரதேச செயலர் திரு. கேதீஸ்வரன் தலைமையில் புதிதாகஅமைக்கப்பட்டுவரும் பிரதேச செயலக வளவில் நேற்று பொதுச் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

எதிர் வரும் 18ஆம் திகதியும் இவ்வாறான ஓர் சிரமதானப்பணி நடைபெறவுள்ளது. (க-14)

## ஈ.சி.ஜி.இயந்திரம் அனுப்பிவைப்பு

(புலோலி)

பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலைக்கு ஈ.சி.ஜி இயந்திரம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இவ் வைத்தியசாலையில் இயங்கிவந்த ஈ.சி.ஜி இயந்திரம் பழுதடைந்தமையால் இவ்வியந்திரம் சுகாதாரத் திணைக்களத்தால் மீளப் பெறப்பட்டு ஊர்காவற்றுறை வைத்தியசாலையிலிருந்து ஈ.சி.ஜி இயந்திரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (வ.52)

## பயிற்சி வகுப்பு

ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் உதவியுடன் வம்ச விருத்திச் சுகாதாரம் பற்றிய பயிற்சிவகுப்பு இம் மாதம் 17 ஆம் 18 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

பயிற்சிகளில் பங்குபற்றுவதற்கு முன்கூட்டியே பதிவு செய்து கொண்ட 40 பாலர் பாடசாலை ஆசிரியர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

## இரத்த வங்கி

# டாக்டர் மீதான விசாரணை எதிரொலி மருத்துவ அதிகாரிகள் சங்கம் கண்டனம்

(கொழும்பு)

கொழும்பு நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பின் போது காயமடைந்த ஜனாதிபதிக்கு அவசர சிகிச்சைக்காக இரத்தத்தைப் பெற்றுக் கொடுத்த இரத்த வங்கி டாக்டர் அத்துல விஜேசேகராவை விசாரணை செய்தமையை எதிர்த்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

சங்கத்தின் செயலாளர் டாக்டர் பிரசன்ன குணசேனவினால் ஒப்பமிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இரண்டாயிரமாம் ஆண்டு 11ம், 12ம், திகதிகளில் இலங்கை வானொலியின் செய்தியில் டாக்டர் டபிள்யூ. எம். ஏ. எஸ். பி. விஜேசுந்தரவிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளதாக அறிவித்தது. இது தொடர்பாக எமது சங்கம் கூடி ஆராய்ந்த பின்னர் இவ்வறிக்கையை வெளியிடுவது எனத் தீர்மானித்தது.

ஜனாதிபதி காயமடைந்த தினத்தில் அவருக்குத்தேவைப்படும் இரத்தத்தைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பு இவ் டாக்டரிடம் இருந்துள்ளது. ஒரு நோயாளியின் உயிரைப் பாதுகாப்பதற்காக அவசர சிகிச்சை தேவைப்படும்போது உடனடித் தீர்மானங்களை எடுக்குமுரிமை வைத்தியர்களுக்குண்டு.

இந்த வகையில் டாக்டர் விஜேசுந்தர மிகவும் பொறுப்புடன் நடந்துகொண்டு நாட்டின் தலைவியைக் காப்பாற்றியுள்ளார். அவர் எடுத்த இந்த முடிவைப் பாராட்டி மெச்சுகின்றோம்.

இரத்த வங்கிக் கிளையின் செயலாளரான டாக்டர் விஜேசுந்தர எமது அமைப்பின் முக்கிய பிரமுகர் என்பதற்காக அவரைக் கஸ்டத்துக்குள்ளாக்க முயற்சிகள் மேற்கொள்ளப் படுவதாகவே நாம் கருதுகின்றோம். இதற்காக எமது ஆட்சேபணைகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவற்றிற்குப் புறம்பாக குண்டுவெடித்த தினமிரவு காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக அவசர சிகிச்சைப் பிரிவில் மேலதிகமாக நூறிற்கும் அதிகமான டாக்டர்கள் கடமையுணர்வுடன் தமது கடப்பாட்டையும் பொறுப்பையும் உணர்ந்து பணியாற்றியுள்ளனர்.

இவ்வாறான நேர்மையுடன் செயற்பட்டவர்கள் மீது பழி சுமத்தி அவர்களை சிரமத்துக்கும் பிரச்சினைக்கும் உள்ளாக்குவது நேர்மையற்றசெயலெனக் கண்டிப்பதுடன் அவர்கள் ஆற்றிய பணிகளுக்காக மதித்துக் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள் என்பதையும் வலியுறுத்திக் கூறுகின்றோம் என்றுள்ளது.

## மிலேனியம் ஆண்டை வரவேற்க ஊர்காவற்றுறையில் மரதன் ஓட்டம்

(ஊர்காவற்றுறை)

மிலேனியம் ஆண்டை வரவேற்கும் முகமாக ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டமரதன் ஓட்டப்போட்டி நேற்று முன்தினம் ஊர்காவற்றுறையில் நடைபெற்றது.

மேற்படி போட்டியை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு. ஜே. எக்ஸ். செல்வநாயகம் வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தார் மரதன் ஓட்டத்தில் ஐம்பது இளைஞர்கள் பங்குபற்றினர்

இதேவேளை வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரணையுடன் பிரதேச செயலர் பிரிவுகளுக்கிடையேயான மட்டுப்படுத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் அடுத்த மாதம் நடுப்பகுதியில் நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## ராஜன்-விக்ரம் கங்கு வெற்றிக் கிண்ண கிறிக்கற் சுற்றுப் போட்டி

(திருநெல்வேலி)

கொக்குவில் வளர்மதி கிராம முன்னேற்றச் சங்கம் வருடாந்தம் நடாத்தி வரும் 'ராஜன்-விக்ரம்-கங்கு'' ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று முதல் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள முன்னணி விளையாட்டுக் கழகங்களில் அழைக்கப்பட்ட நான்கு கழக அணிகளுக்கிடையில் இப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இம்முறை கொக்குவில் மத்திய சனசமூக நிலைய (கே. சீ. சீ. சீ) அணி யாழ்ப்பாண பல்கலைக்கழக அணி, யாழ். ஜொலிஸ் ரார்ஸ் வி. க. அணி. மானிப்பாய் பரிஷ் வி. க. அணி, ஆகிய அணிகள் அழைக்கப்பட்டுள்ளன.

சுழற்சி (லீக்) முறையிலான இந்தச் சுற்றுப் போட்டியில் முதல் இரு நிலைகளையும் பெறும் இரு அணிகள் இறுதிப் போட்டியில் மோதும் இப் போட்டிகளின் முதற் சுற்று 30 ஓவர்களுக்கும் இறுதிச் சுற்று 40 ஓவர்களுக்கும் மட்டுப் படுத்தப்பட்டுள்ளது. (க-22)

## சிட்னியில் நடந்த போட்டியில் இந்தியாவை அவுஸ்ரேலியா வென்றது

(சிட்னி)

அவுஸ்திரேலியா சிட்னி நகரில் நடைபெறும் முக்கோணக் கிறிக்கற் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் இந்தியா அவுஸ்திரேலியாவிடம் தோல்வி கண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 36.3 ஓவர்களில் தனது சகல விக்கட்டுக்களையும் இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றது.

இந்தியஅணி சார்பில் ராகுல் ராவிட் 24 ஓட்டங்களையும், சொப்ரா 14 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். அவுஸ்திரேலிய அணி சார்பில் மக்ரத் சைமொன்ட்ஸ் ஆகியோர் தலா 4 விக்கற்றுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி தனது இலக்கை இலகுவில் எட்டலாம் எனக் கருதியபோதும் 5 விக்கட்டுக்களை இழந்து 26.4 ஓவர்களிலேயே வெற்றியை நிர்ணயித்தது.

அவுஸ்திரேலிய அணி சார்பில் ஆரம்பத் துடுப்பாட்டவீரர் கில்கிறிஸ் 37 ஓட்டங்களும், சைமோன்ட்ஸ் ஆட்டமிழக்காது 28 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

இந்திய அணியின் பந்து வீச்சாளர் சிறிநாத் 4 விக்கட்டுக்களையும் வெங்கடேஸ் பிரசாத் 1 விக்கட்டையும் கைப்பற்றினர். இப் போட்டியிலும் தோல்வியடைந்ததன் மூலம் இந்திய அணி இத் தொடரில் பங்குபற்றிய மூன்று போட்டிகளிலும் தோல்வியடைந்துள்ளது. (த-27)

## மத்தியஸ்தர் சங்ககூட்டம்

(திருநெல்வேலி)

யாழ்ப்பாண கிரிக்கெற் மத்தியஸ்தர்கள் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று காலை 10.30 மணியளவில் யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது என சங்கத்தின் செயலாளர் சு.சிறீகாந்தன் அறிவித்துள்ளார். ஆட்டங்களுக்கு மத்தியஸ்தர்களை ஒழுங்கு செய்தல், புதிய நிர்வாக சபைத்தெரிவு மற்றும் முக்கிய பல வியைங்கள் ஆராயப்படவுள்ளதால் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (க-22)

## 25 பேருக்கு கண்ணாடி வழங்கல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் இன்று 16ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ஏற்கனவே பதிவு செய்த கண்பார்வை குன்றிய 25 பேரிற்கான கண்ணாடிகள் கச்சாய் றோட்டில் உள்ள லிகோரியல் சேச்சில் வழங்கப்படவுள்ளதாக கழகத்தின் செயலாளர் வீ.வீ. மகாலிங்கம் தெரிவித்தார். (க)

## இராசி பலன்

16-01-2000
ஞாயிற்றுக்கிழமை
(தமிழுக்கு தை 02)

தசமி இரவு 10.53 வரை, பரணி பகல் 2.03 வரை, மரணயோகம், கரிநாள், இராகுகாலம் மாலை 5.54 முதல் 7.01 வரை, சுபநேரம் காலை 10.05 முதல் 11.35 வரை கார்த்திகை விரதம்.

**மேடம்:** நல்லோர் சந்திப்பு, உற்சாகம், மனமகிழ்ச்சி.

**இடபம்:** பிடிவாதம், கடன்சுமை, பெண் கவலை.

**மிதுனம்:** புத்திரர் உதவி, வாக்கு வன்மை, மதிநுட்பம்.

**கடகம்:** தெய்வீகச் செலவு, தொழில் சிறப்பு, பணியாள் உதவி.

**சிங்கம்:** பிறர் கண்டனம், தொழில் கஷ்டம், பாதக நிலை.

**கன்னி:** குடும்ப சங்கடம், மாமனார் கவலை, அலைச்சல்.

**துலாம்:** எதிர் பாராத நன்மை, பெற்றோர் ஆசி, கல்வியியல் சிறப்பு.

**விருச்சிகம்:** பிறர் தயவு, புதிய முயற்சி, விருந்துபசாரம்.

**தனுசு:** முரண்பாடு, பழைய நினைவுகள், குடும்பப் பிரிவு.

**மகரம்:** காரியநடை, எதிரிகள் பயம், அகால உணவு.

**கும்பம்:** இனிய கனவு, மாதர் உதவி, தப்பபிப்பிராயம்.

**மீனம்:** வீண் செலவு, தவறான செயல், நிலைப் பிரிவு.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

- அனுஷியா


யாழ் லயன்ஸ் கழகம் நடாத்தும்

We Serve நலிவுற்றோர் நலவாழ்வு நிதிக்கான
பொங்கிவரும் புத்திசை கானம்

**இன்னிசை நிகழ்ச்சி**

இடம்: கைலாசபதி கலையரங்கு, யாழ். பல்கலைக்கழகம்.
காலம்: 16 - 01 - 2000 காலை 10.00 மணி
பிற்பகல் 2.00 மணி
கட்டணம்: ரூபா 100, ரூபா 50.
ரிக்கட்டுக்களை மண்டப வாயிலிலும் யாழ். லயன்ஸ் கழக உறுப்பினர்களிடமும் பெற்றுக் கொள்ளலாம்.
10 மணி நிகழ்ச்சி: பிரதம விருந்தினர்
வைத்தியகலாநிதி S. குணானந்தன்
2 மணி நிகழ்ச்சி: பிரதம விருந்தினர்
லயன் வைத்தியகலாநிதி S. S. அருளானந்தம்
நிகழ்ச்சியை தொகுத்து வழங்குபவர்
திரு K. P. R. நவரத்தினராசா
கவிதாலயா இசைக் குழுவின்
இன்னிசை மழையில் நனைக!
நலிவுற்றோர் வாழ்வை வளம்படுத்த வருக!
லயன் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன்
தலைவர்
யாழ். லயன்ஸ் கழகம்.
(00104)

# தமிழ்-சிங்கள மக்களின் கலாச்சார வாழ்க்கைச் சூழலைநன்கு அறிந்தவர் யோசவ்வாஸ்

அருட்திரு ஞா. புலேந்திரன்

இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் 457 ஆண்டு கால வரலாற்றில் 1995ஆம் ஆண்டு தை மாதம் 21ஆம் திகதி முன்பு என்றும்இல்லாத வாறு முக்கியம் பெற்ற நாளாகும். இலங்கை, இந்தியக் கத்தோலிக்க மக்களின் நீண்டகால மன்றாட்டங்களும் எதிர்பார்ப்புக்களும் நிறைவேறிய நன்நாளாகும். ஆசிய மண்ணின் மைந்தன் ஆசாரத்திற்குரிய யோசவ்வாஸ் முத்திப்பேறு பெற்ற நிலைக்கு திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் அவர்களினால் உயர்த்தப்பட்டு பிரகடனம் செய்யப்பட்டமை, அவர் பணியால் பயன் பெற்ற இலங்கை வாழ் கத்தோலிக்க மக்களுக்கு இரட்டிப்பான மகிழ்வை அளித்த நிகழ்வாகும்.

புனிதர்கள் இம்மண்ணக வாழ்வை நிறைவு செய்து விண்ணகம் நுழையும் நாளே அவர்களது திருவிழா நாளாகும். இதற்கேற்ப முத்திப்பேறு பெற்ற யோசவ்வாஸ் 1711 ஆம் ஆண்டு தைமாதம் 16 ஆம் திகதி இறைபதம் அடைந்த நாளே இவரது திருவிழா நாளாகும். இலங்கையிலும், இந்தியாவிலும் இவர் புனிதர் நிலைக்கு உரியவராக இன்று வணங்கப் படுகின்றார்.

இலங்கைத் திருச்சபைக்கு இவர் ஆற்றிய மகத்தான பணியை முன்னிட்டு ''இலங்கை அப்போஸ்தலர்'' என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகின்றமை மிகப் பொருத்மானது. இவரது வாழ்வும், பணியும் இலங்கைத் திருச்சபைக்கு மதிப்பிடமுடியாத அளவிற்கு பெரும் இறை ஆசிராகவும் வெற்றியாகவும் அமைந்தமைக்கு இரண்டு விடயங்களைக் குறிப்பிடலாம்.

★ இவரது புனிதமான வாழ்வு

★ மிகப் பொருத்தமான மறைபரப்பு முறைகளை இவர் கையாண்டமை.

இவர் ஆற்றிய அனைத்துப் பணிகளிலும் முதன்மையான இடத்தைப் பெற்று விளங்கியது, இறைமகன் இயேசுக் கிறிஸ்துவுடன் இவர் கொண்டுள்ள ஆழமான, நெருங்கிய ஒன்றிப்பாகும். இதனையே தம் பணி அனைத்திற்கும் அடிப்படையாகவும். ஊற்றாகவும் கருதி செயற்பட்டார்.

இறைவனது புகழையே தமது இலட்சிய மாகக் கொண்டு செயற்பட்டதும், தம் வாழ்வின் எல்லா நிகழ்வுகளிலும் இறைவன் திட்டத்தையே செயற்படுத்தியதும் இவருக்கு வாழ்வின் எல்லா மாக விளங்கியது.

இறை அடியார்களுக்குப் பணி புரிவதில் தணியாத தாகம் கொண்டு விளங்கினார். நற்செய்தி அறிவிப்பு, மறை பற்றிய அறிவைக் கற்றுக் கொடுப்பது, மக்களைத் தரிசித்து விசுவாச வாழ்வில் ஊக்கம் அளிப்பது, நோயாளர்களைப், பராமரிப்பது, ஏழைகளுக்கு உதவி வழங்குவது எனப் பல்பரிமாண செயற் பாடுகளாகவே இவரது பணி அமைந்திருந்தது.

திருவருட் சாதனங்கள் மட்டில் ஆழ்ந்த பக்தியும், மதிப்பும் கொண்டு விளங்கிய இவர், குறிப்பாக ஒப்புரவு அருட்சாதனத்தையும், திருப்பலியையும் அடிக்கடி நிறைவேற்றி ஆன்மீக வாழ்விற்கு ஊட்டத்தையும், உறுதியையும் பெற்றுக் கொண்டார்.

இவரது வாழ்வும், பணியும் பற்றி சான்று கூறும் பலரும் அன்னை மரியாள் மட்டில் இவர் கொண்டுள்ள ஆழமான பக்தி பற்றி உறுதியான, விபரமான பல சான்றுகளைக் குறிப்பிட்டுள்ளார் மக்கள் மத்தியில் பரப்பிய தேவ கன்னியின் பக்தி முயற்சியே ஒல்லாந்தர் காலத்துப் பல்வேறு நெருக்குவாரங்கள் மத்தியிலும் கத்தோலிக்க விசுவாசம் உறுதியுடன் காக்கப் படக்காரணமாக அமைந்தது என்பது வரலாறு கற்பிக்கும் உறுதியான பாடமாகும்.

இலங்கை வாழ் தமிழ் சிங்கள மக்களின் கலாசாரப் பின்னணியையும், வாழ்க்கைச் சூழலையும் நன்கு அறிந்து தமது மறைப்பணி முறைகள் அமைத்துக் கொண்டார். இவர் ஆசிய மரபிற்கேற்ப வாழ்ந்த துறவி வாழ்வு ஒல்லாந்த அதிகாரிகளின் இறுக்கமான கண்காணிப்பினின்று தப்பித்துக் கொள்ள மேற்கொண்ட மாற்றுப் பாத்திர ஏற்புக்கள இவர் கையாண்ட சிறந்த மறை பரப்புமுறைகளிற்சிலவாகும்.

லண யாக்கோமே கொன் சால்லெஸ் துணையுடன் தமிழ், சிங்கள மொழிகளில் கிறிஸ்தவ இலக்கியங்கள் பலவற்றை ஆக்கியுள்ளார். மேலும் இவரது புனிதமான வாழ்வு சக குருக்களுக்கும், கத்தோலிக்க மக்களுக்கும், ஏனைய மதங்களைச் சார்ந்த மக்களுக்கும் சிறந்த சான்றாக அமைந்தது.

தாம் பணியாற்றிய மக்களுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்தி, அவர்கள் குறைகள், தேவைகள், அங்கலாய்ப்புக்கள், நிறைவுகளை அறிந்து மக்களை நன்கு புரிந்து பணியாற்றினார். மக்கள் வாழ் இடங்களைத் தேடி தாமே சென்று பணிபுரிந்தார்.

இலங்கைத்தீவு முழுவதும் தனியாகப் பணியாற்றிய இவருக்கு இலங்கை பரந்து பட்ட பணித்தளம். இந்நிலையில் மூப்பர், அண்ணாவி முறைகளை அறிமுகம் செய்து பொது நிலையினரையும் மறை அறிவுப்புப் பணியில் இணைத்துக் கொண்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

குருக்கள் இல்லாத நிலையிலும் மக்கள் தாமாகவே கூடி வழிபடக் கற்றுக் கொடுத்த பூசைத்தியானம். செபமாலை ஜெபிதல் போன்ற வழிபாட்டு முறைகள் காலத்தின் தேவைக்கேற்ப வழிபாடுகள், மறை பரப்பு முறைகள் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இன்றைய நிலையில் இவரது வாழ்வை எமக்கு எடுத்துக்காட்டாக ஏற்பதோடு, இவரது பரிந்துரையால் எமது நாட்டிற்கு நீதியோடு கூடிய, நீடித்த, நிலையான சமாதானம் கிடைகக வேண்டுவோம்

## 19ஆம் திகதி திறப்பு விழா

[அச்சுவேலி]

எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் கோப்பாய் பிரதேச செயலகம் புதிய கட்டிடத் தொகுதிக்கு இடம் மாற்றம் செய்யப்படவுள்ளது.

சுமார் 2 கோடி ரூபா செலவில் நவீன வசதிகளுடன் புதிதாக அமைக்கப்பட்ட இக்கட்டிடத் தொகுதியின் திறப்புவிழா வைபவம் எதிர்வரும் 19ஆம் திகதி மிகவும் எளிமையான முறையில் விசேட சமயக்கிரியைகளுடன் நடைபெறும்.

## விளையாட்டு உபகரணங்கள் விநியோகம்

( யாழ்ப்பாணம் )

முன்பள்ளிச் சிறார்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் யுனிசெவ் நிறுவன உதவியுடன் யாழ். பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டது.

தற்போது யாழ். பிரதேச செயலகத்தால் அவை முன் பள்ளிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

( த - 29 )

## கொள்ளை முறியடிப்பு

(கொழும்பு)

நடுக்கடலில் இடம்பெற்ற கொள்ளை முயற்சி ஒன்றினை இலங்கை கடற்படையினர் முறியடித்துள்ளனர்.

'சிம்ப்கான்' என்ற கப்பல் சிங்கப்பூரிலிருந்து எகிப்து நோக்கி சென்று கொண்டிருந்தபோது இரண்டுக்குமேற்பட்ட படகுகளில் வந்த கொள்ளையர் கொள்ளை முயற்சியில் ஈடுபட்டனர்,

ஆனால் இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட துரித நடவடிக்கையையடுத்து கொள்ளை முயற்சி தடுக்கப்பட்டது. [க]

ஐ. தே. க. தேசியப்பட்டியல் எம். பி.

# ஜயலத் ஜெயவர்த்தனாவின் பாதுகாப்பை அதிகரிக்கவும்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி எம். பி. டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனாவுக்கு தற்போது வழங்சப்பட்டுவரும் பாதுகாப்பை மேலும் பலப்படுத்த வேண்டுமென்று பொலிஸ்மா அதிபருக்கு ஐ. தே. க. செயலாளர் காமினி அத்துக்கோரளை கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். இக் கடிதத்தின் பிரதி பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அக் கடிதத்தில் காமினி அத்துக்கோரளை குறிப்பிட்டுள்ளதாவது:-

டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா தனக்கு ஆபத்து அதிகரித்திருப்பதாகவும் குறிப்பாக ஜனாதிபதி தன்னைப்பற்றி அண்மையில் பகிரங்கமாக குறிப்பிட்டதை அடுத்து அச்சுறுத்தல் மேலும் அதிகரித்துள்ளது. இதனை அடிப்படையாக வைத்து தீவிரவாதக் குழுக்களிடம் இருந்து ஆபத்து ஏற்படக் கூடியவகையில் பாராளுமன்றத்தில் அரச அமைச்சர்களும் எம். பிகளும் பேசி இருக்கின்றார்கள்.

டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா 1994 ல் இருந்து ஐக்கிய தேசிய கட்சியின் தேசியப்பட்டியலில் எம். பியாக இருந்துவருகின்றார்.

# வடகிழக்கில் உள்ள 158 பாடசாலைகளில் ஒவ்வொரு ஆசிரியரே கடமையில்

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு மாணங்களில் உள்ள சுமார் 158 பாடசாலைகள் தலா ஒவ்வொரு ஆசிரியரை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு இயங்குவதாக மாகாண கல்வி அமைச்சு அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

இவ்வாறு ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்கு மேலும் ஆசிரியர்களை இடமாற்றம் செய்து மாணவர்களின் கல்விக்கு உதவுமாறு மாகாண கல்வியமைச்சு வலயக் கல்விப் பணிப்பாளர்களைக் கோரியுள்ளது,

இதேவேளை வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தற்போது 5163 ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன. இவற்றில் இந்த வருடம் 4650 வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. ஏற்கனவே யாழ். மாவட்டத்தில் 460 தொண்டர் ஆசிரியர்களுக்கும். கல்முனை மாவட்டத்தில் 132 தொண்டர் ஆசிரியர்களுக் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 817 பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கு வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜெயவர்த்தனஅனுமதிவழங்கியுள்ளார்.

கல்விச் சேவைக்குழு ஏற்கனவே ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்களைக் கோரிப் பெற்றுள்ளது. இதற்கமைய இந்த மாதத்தில் 1500 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கவுள்ளனர் என்றும் அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-14)

## லயன்ஸ் கழகம் உடுபுடவை அன்பளிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் கைதடியிலுள்ள வயோதிபர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியவர்களுக்கு உடுபுடவைகளை அண்மையில் அன்பளிப்புச் செய்துள்ளது.

கழகத்தின் தலைவர் லயன் எஸ். சந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் தென்மராட்சி பிரதேச செயலர் திரு. பு. சுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகப் பங்கு கொண்டு முதியவர்களுக்கான அன்பளிப்புக்களை வழங்கினார்.

செயலாளர் லயன். வீ. மகாலிங்கம் நன்றியுரை கூறினார். (க)

# வடக்கு கிழக்கு மாகாண பாடசாலைகளை மறு சீரமைப்புச் செய்ய நடவடிக்கை

(ஏறாவூர்)

உலக வங்கியின் பொதுக் கல்வி சீர்திருத்த திட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகளை இவ்வாண்டு முதல் மறுசீரமைப்பு செய்வதற்கு மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டு 1 முதல் 9 வரையான பாடசாலைகள் கனிஷ்ட இடைநிலை பாடசாலைகள் எனவும் ஆண்டு 10 முதல் 13 வரையான பாடசாலைகள் சிரேஷ்ட பாடசாலைகள் என்றும்வகுக்கப்படவுள்ளது.

இப் புதிய திட்டத்தின் கீழ் 50 ற்கு குறைவான எண்ணிக்கையை கொண்ட மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகள் மூடப்பட்டும் வாய்ப்புள்ளதாகவும் கருதப்படுகிறது. (க)

# மட்டக்களப்பில் மூவர் கைது

கொழும்பிற்குக் குண்டுகளைக் கொண்டு செல்பவர்கள் என்ற சந்தேகத்தில் மட்டக்களப்பில் 69 வயதுடைய வயோதிபர் உட்பட மூன்றுபேரை அம்பாறை நாசகாரத்தடுப்புப் பொலிஸ் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

மட்டக்களப்பில் வைத்து காளுவாஞ்சிக் குடியைச் சேர்ந்த ஓட்டோசாரதியான எஸ். கேதீஸ்வரன் (வயது 19) குருமன் வெளியைச்சேர்ந்த வி. இராசதுரை(69 வயது) அவரது மருமகள் கே. சறோஜினி(வயது 36) ஆகியோரே பொலிஸாரினால் கைது செய்யப்பட்டவர்களாவர்.

கொழும்பில் கைது செய்யப்பட்ட சிலர் கொடுத்த தகவல்களின் படியே இவர்கள் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்படுவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

# சுயதொழில் உற்பத்திகள் பாதிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்திலுள்ள மீசாலை, கொடிகாமம் பகுதிகளில் சுயதொழில் அடிப்படையில் உற்பத்தி செய்யப்படும் பாய்கள் சந்தைப்படுத்த முடியாத இக்கட்டான நிலையில் இருப்பதாக பாய் தயாரிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கப்பல் மூலம் இங்கு கொண்டுவரப்படுகின்ற வெளிநாட்டு மற்றும் தென்னிலங்கைப் பாய்கள் பெருமளவு கடைகளில் விற்பனைக்காக இருப்பதால் உள்ளூர் உற்பத்திப் பொருளை மக்கள் பெருமளவு விரும்பிக் கொள்வனவு செய்வதில்லை எனக் கூறப்படுகின்றது.

அதேபோல பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற கயிறும் பெரும் அளவில் விற்பனையாவதில்லை என அறியப் படுகின்றது. (77)

# நியதியும் நானும்

நீ எங்கும் சென்றாலும் உன்கடமையைசெய். உன்னுள் இருந்து நான் வழிகாட்டிக் கொண்டிருக்கிறேன் என்பதை உணர்ந்து கொள். ஒவ்வொருஅடி எடுத்து வைக்கும்போதும் நான் உன்னுடன் இருக்கிறேன். வரஇருக்கும் வருடங்களில் என்னைப் பல வடிவங்களில் உன்னால் உணர முடியும்.

நீ என்னுடையவன். எனக்கு மிகவும் நெருக்கமானவன். கண்இமைகள், விழியைக் காப்பது போல் நான் உன்னைக் காப்பாற்றுவேன். நான் உன்னை என்றும் விட்டு விலக மாட்டேன். நீயும் என்னைவிட்டு விலக முடியாது. இந்த நிமிடத்திலிருந்து எதையும் எதிர்பார்த்துச் செயல்ப்படாதே! மாறாத அன்புடன் உன்கடமையைச் செய்! எல்லாவற்றிலும் இறைவனைக் காணக் கற்றுக்கொள். பொறுமையுடன்இரு. சரியான நேரத்தில் உனக்கு எல்லாம் அளிக்கப்படும். மகிழ்ச்சியாய் இரு எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம். எதுநடந்தாலும். எதை அனுபவித்தாலும். என்சங்கல்பத்தினாலேயே நடைபெறுகிறது என்பதைப் புரிந்து கொள்!

நான் இவ்வுலகத்திற்கு வந்துள்ள அவதார நோக்கத்தைத் தடுத்து நிறுத்தவோ. தாமதப்படுத்தவோ எந்த சக்தியாலும் முடியாது. கண்முன்னே விரிய இருக்கும் பொற்காலத்தில் புனித ஆத்மாவாகிய நீ ஆற்ற வேண்டிய பணிகள் இருக்கின்றன. அதைப்புரிந்து கொள்! -பாபா

## வலம்புரி வாழி வாழி

நலந்தர எழுந்திடும் நிதம்தரு புதினமாய்
வளம்பட வழங்கிட தினம்தினம் வலம்புரி
மனம்பல மகிழ்ந்திட நடந்திடும் நிகழ்வினை
தரம்பட சுமந்துநீ துலங்கிட வளர்ந்திடு
உளம்பல உவந்திட நிலந்தனில் திரிந்திட
இடந்தரும் சுதந்திர வலம்புரி நீயே
நிரந்தரம் திகழ்ந்திட தமிழ்மொழி பரந்திட
நலம்புரி வலம்புரி வாழி வாழி.

அரியாலை **வசந்தன்**

## வாழ்க பல்லாண்டுகள்

இன்று நன் வலம்புரி என் கையில் இவர்ந்தது
நன்றென உள்ளத்தில் உவகையும் மலர்ந்தது.
என்றேனு மொருநாள் இவ்வாறு ஓரிதழ்
நன்றே மலருமென்றாவலாய் இருந்துளோம்,

வந்தது வலம்புரி புத்தாயிர மாண்டில்
நந்தமிழ் உறவுகள் நயந்தே களித்திட
செந்தமி ழோசையை செக மெலாம் முழக்கியே
வந்துநீ காலையில் நின்முகம் காட்டுக.

சென்ற காலத்தின் பிழையெலாந் தவிர்த்திட
இன்றே முந்தருளிய இன்வலம் புரியே நீ
நன்றியோ டிந்நாளில் நற்றமிழ் பரப்பியே
வென்றுவா ஊர்வலம் புரியெலாம் விளங்கவே

வாழ்க பல்லாண்டுகள் வலம்புரி முத்தேறும்
வாசகர் நெஞ்சிலே வாழ்வதுன் சொத்ததே
ஆழ்கடல் அமுதென அள்ளித்தா செய்தியை
அனைவரும் போற்றிட ஓயாதே வலம்புரி.

**புலவர் கவிக்கோ**

## தமிழ் மொழிக்கேற்ற பணிசெய்வோம்

எங்கள் தமிழ்மொழிக்கே — நாங்கள்
ஏற்ற பணிபுரிவோம்
சொந்தத் தமிழ் வளர — மனச்
சோம்ப லில்லா துழைப்போம்!

மற்றை இனத்தவரின் — மாறு
சொத்தை மொழி பேசி
சற்றும் உணர்ச்சியின்றி — காலம்
தாழ்ப்பது நன்றாமோ?

பண்பு நிறைமொழியை — உயிராம்
எங்கள் தமிழ்மொழியை
கண் ணெனப்போற்றாதார் — தமிழ்ப்
பண்பு நிறைந்தோரோ?

**செ. உமை**

## சாற்று தமிழ்ச் சிறப்பை!

எண்ண இனிக்கின்ற வண்ண வலம்புரியே
சின்னக் கால்பதித்து சீக்கிரமாய் நடைபயின்று
பென்னம் பெருவுலகின் பேதமையை அகற்றிதமிழ்
மண்ணின் மகிமையெல்லாம் மற்றவரும் அறியு
வதனைத்தால்
கன்னத்தில் முத்தம்ஒன்று கனிவாய் நான்தருவேன்!

தத்தி நடக்கையிலே தவறி வீழ்வதும்
புத்தி கெட்டவரின் பழிமொழிகள் சூழுவதும்
எத் திக்கும்நடப்பதுண்மை; எங்கள் வலம்புரியே
எந்த நிலைவரினும் எந்தன்கை உனக்கே
எழுந்து நடந்துவந்து சாற்று தமிழ்ச் சிறப்பை!

குளம் என்று எண்ணிக் குட்டையிலே குதித்ததுவும்
வளம் என்றுவந்ததெல்லாம் வழிமாறிப்
போனதுவும்
பழம் கதையாய் பகற்கனவாய் பட்டெனவே
பறந்துசெல்ல
வலம்புரியே! வானத்தைக் கிழித்துநல்ல
பகலவனாய் வந்துஒளி சிந்து தமிழ்க்குடிக்கு!

**செ. உமை**

## சயனைட் அருந்தி தற்கொலை

(வவுனியா)

வவுனியா நகரில் தமிழ் இளைஞன் ஒருவர் சயனைட்டு அருந்தி மரணமானார். இச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 5-45 மணியளவில் மணிக்கூட்டு சந்திக்கு அருகாமையில் நடைபெற்றுள்ளது.

விசேட பிரிவு பொலிசார் வழமையான சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டபோது சந்தேகத்திற்குரிய இளைஞன் கைதானபோது அவர் சயனைட்டு அருந்தி உள்ளார் இவரை காப்பாற்றும் முயற்சியாக பொலிசார் வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டபோது மரணமாகிவிட்டார் இவர் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன,

சடலம் அடையாளம் காணப்படவில்லை வவுனியா வைத்தியசாலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## இருவர் காயம்

அண்மையில் இடம்பெற்ற ஷெல் தாக்குதல் காரணமாக சாவகச்சேரி நகரசபை மைதானத்தில் இருந்த குடிநீர் கிணறு மிக மோசமான முறையில் சேதமடைந்துள்ளது.

அத்துடன் ஏவப்பட்ட ஷெல் தாக்கத்தினால் இரு பொது மக்கள் காயப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சாவகச்சேரி நகரப் பகுதியை நோக்கி அடிக்கடி ஏவப்பட்ட ஷெல்கள் காரணமாக பொதுமக்கள் மத்தியில் அச்சமும் பீதியும் மேலும் அதிகரித்துக்காணப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கண்ணாடி வழங்கல்

[இளவாலை]

மானிப்பாய் லயன்ஸ் கழகம் இளவாலைப் பகுதியைச் சேர்ந்த சுமார் 100 க்கு மேற்பட்டோருக்குகடந்த ஞாயிற்றுக் கிழமை கண்ணாடிகளை வழங்கியது.

மேற்படி கண்ணாடி வழங்குவதற்கான கண்பரிசோதனையை கடந்த வருடம் முற்பகுதியில் மேற்கொண்டது.

எனினும் கண்ணாடிகள் எடுத்துவரப் பிந்தியதால் தற்போதே கண்ணாடிகள் வழங்கப்பட்டன. (க-12)

## அடியார்கள் வருகை குறைவு

நயினாதீவு

புங்குதீவில் அண்மையில் நடந்த சாரதாம்பாள் கொலைச் சம்பவத்தை அடுத்து வெளி இடங்களில் இருந்து நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்கள் தொகை வெகுவாக குறைந்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மக்கள் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்தியூஸ் வீதியிலுள்ள இரண்டு பாலங்கள் நீண்ட நாட்களாக சேதமடைந்து திருத்தப்படாத நிலையில் காணப்படுகின்றது.

இதனால் மக்கள் வாகனப் போக்கு வரத்தில் பெரிதும் சிரமமடைந்து வருகின்றனர்.

இதேவேளையில் யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை, குருசோர் வீதிகள் மக்கள் பாவனைக்கு உதவாதபடி நீண்டகாலமாகவே சேதமடைந்துள்ளது. இதனால் இப்பகுதி மக்களும், இதனூடாக பாடசாலை செல்லும் மாணவர்களும் மிகுந்த சிரமங்களையும் விபத்துக்களையும்சந்திக்க நேரிடுகின்றது.

(க-59)

## வைத்தியசாலை புனரமைப்பிற்கு 42 மில்லியன்ரூபா தேவை என மதிப்பீடு

புற்றுநோய்கள் சிகிச்சைக்காக வாரந்தோறும் குறைந்தது 10 நோயாளர்கள் கொழும்பு மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு செஞ்சிலுவைச் சங்கம் நடத்தும் கப்பல் சேவையின் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

மேலும் சிகிச்சை பயனளிக்காத நிலையில் மகரகம வைத்திய சாலையில் இறக்கும்நோயாளர்களை கொழும்பில் அடக்கம் செய்வதற்கு, நோயாளரின் உறவினர்கள் பெருஞ் சிரமத்தை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இதேவேளை யாழ். மாவட்ட தெல்லிப்பளை புற்று நோய் வைத்தியசாலையை புனர் நிர்மாணம் செய்யும்படியாழ். புற்றுநோய் சங்கத்தினர் அரசாங்கத்தை வற்புறுத்தி வருகின்றார்கள்,

இப் புற்றுநோய் வைத்தியசாலையை புனர் நிர்மாண்ம் செய்வதற்கு 42 மில்லியன் தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டிருக்கின்றது. என்று செய்திகள் தெரிவித்துள்ளன. (ல-5)

## "நாங்களும் பொங்கினோம்"

பொங்கலோ பொங்கல்
தைப் பொங்கல்
தரணியெங்கும்
தமிழர்தம் தனிப்பொங்கல்
சூரியனுக்கு நன்றிப் பொங்கல்
உழைப்பிற்கு நன்றிப் படையல்
இன்றோ
கை மண் வெட்டியறியா
கால் வரம்புவழி நடந்தறியா
கண் களனி கண்டறியா
புழுதியுழவு புதுமணம் மூக்கறியா
கதிரவன் இருள்கலைப்பு
கலப்பை மாடு ஊர்வலம்
காகம் கருங்குருவி
பனித்துளித் தூறல்
பழையசோறு ஊறுகாய் பனாட்டு
சேற்றுழவு
பலகையடித்தல்
நிரல் பிடித்து நாற்று நடுதல்
நீர் பாச்சுதல்
வரம்பு முறித்தல்
களையகற்றுதல்
பறண் அமைத்துப் பன்றிதுரத்தல்
பயிர் பாற்பிடித்தல்
பாவையர் பச்சைக் கிளிதுரத்தல்
தளிர் தலைஅசைத்தல்
கலகலத்தல்
தலை சாய்த்தல்
பொழுது பார்த்து புதிர்வெட்டிப் பதர்நீக்கல்
அறியாமலேயே....
தைப்பொங்கல்
பொங்கலோ பொங்கல் தமிழ் பொங்கல்
புதுப்பொங்கல்
நூற்றாண்டின் முதற்பொங்கல்
மிலேனியத்தின் புதுமைப் பொங்கல்
சூரிய பொங்கல்
உழவன் பொங்கல்
தமிழன் பொங்கல்
நாமும் செய்தோம் தைப்பொங்கல்
நிலம் மொழுக சாணி
பாற்பண்ணை வீதியில்
பால்கறந்த தேங்காய் பூவில் கோலம்!
அயலில் பறித்த மாவிலை
கடையில் வாங்கிய அரிசி
சந்தையில் எடுத்தது கரும்பு!
கப்பலில் வந்தது சக்கரை
நேற்றே பிடித்தது GTZ தண்ணீர்.
தமிழர் திருநாள்
தைத் திருநாள்
தரணிக்கு வழிகாட்டும் தமிழ் திருநாள்
சடங்காய் முடிந்தது.
கலாசாரம் பண்பாடு
பட்டுடுத்தி பூச்சூடி — மணமில்லை
பாவாடை தாவணி
பட்டுவேட்டி — இடையில் சணல்
நிறைகுடம் சந்தனம் குங்குமம்
பொங்கலோ பொங்கல்
தைப்பொங்கல்
தமிழர்தம் தனிப்பொங்கல்
சூரியனுக்குப் படைத்த பொங்கல்
சுவிற்சிலாந்திலும் நோர்வேயிலும்
நடக்குது
சூரியன் நடுநிசியில்
வருகுது
உழவன் செய்த பொங்கல்
உலகெல்லாம் நடக்குது
தமிழன் வீடெல்லாம் நடக்குது
தமிழர் தம் பெருமை பேசுது அகதி
தங்கி வாழ்பவன்
விளைநிலங்கள் ஏங்குது
வேலைக்காரன் கம்பு காய்து
கலப்பைகள் தூங்குது
காளையர் கால்கள் எங்கோ ஓடுது
கன்னியர் ''காணவில்லை''
தென்மாங்கு ஒலிக்கவில்லை
இலவச அரிசி இல்லையென்றால்
சோறில்லை
அகதி இரப்பு இல்லையென்றால்
வாழ்வில்லை
பொங்கலோ பொங்கல்
தைப்பொங்கல்
நாங்களும் பொங்கினோம்
தமிழ் பொங்கல்:

**விரிவுரையாளர் R. திலகரட்ணம்**

செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப்பு உடைத்து

- குறள்

# வலம்புரி

## காலத்தின் தேவை

இன ஒதுக்கல், பாரபட்சமாக நடத்துதல் சமத்துவமின்மைபோன்ற அநீதிகள் இறுதியில் ஒட்டுமொத்தமாக அடக்குமுறை ஒன்றிற்கே வழிவகுக்கும். இது கனேடிய உயர் நீதிமன்ற நீதியரசர் கீயுறி யெக்ஸ்குபேயின் கூற்று. கௌரவமாகவும் சமாதானமாகவும் நடத்தப்பட வேண்டும். என்ற வேட்கை சகல சமூகங்களிலும்நிலவியதைமனித குலவரலாறு முழுவதிலும் காணக் கூடியதாகவுள்ளது.

சகல மனித உரிமைகளிற்கும் அடிப்படையானது சமத்துவம். சட்டத்தின் முன் சகலரும் சமம் என்ற கோட்பாடு மிகமுக்கியமானது. இதன் மூலம் சகல ஒடுக்குமுறைகளுக்கும் முடிவு காண முடியும். நீதித்துறை முதன்மை யானதாகவும் எதனாலும் கட்டுப்படுத்தப்படாததாகவும் விளங்க வேண்டும். மேலும் நீதியரசர்களினதும், நீதித்துறை சார்ந்தவர்களினதும் தனிமனித சுதந்திரமும் முக்கியமானது. நீதித்துறை பக்கச்சார்பற்றதாகவும் எந்தவித பாரபட்சங்களும் அற்றதாக விளங்க வேண்டும்.

மேலே கூறப்பட்ட கருந்துக்கள் பல்லின மக்களிடையே நிலை பெற வகை செய்யின் போட்டியும் பூசலும், அஜாரகமும் அழிவும் தலை தூக்கா தென்பதுதெளிபு ஜனநாயகம் தழைத்தோங்க வேண்டுமானால் நீதியரசரின் கருத்துக்கள் அச்சொட்டாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது உண்மையே.

விடியலை நோக்கி புத்தாயிரமாம் ஆண்டில் காலடி எடுத்துவைக்கும் தமிழர்க்கு குபேயின் பண்பட்ட கருத்துக்கள் செவிக்கு இனிமையாகத்தான் இருக்கின்றன. ஆனால் சம்பந்தப்பட்டவர்க்கு அவை இதயத்தைத் தொட்டு திசையை திருப்ப வேண்டுமே. அருவருக்கத்தக்க செயற்பாடுகள் மறைந்து ஆக்கபூர்வமான செயற்பாட்டில் இன்றே இறங்க வேண்டும். நாடு நன்றே வளம் பெற ஆவன அனைத்தும் செய்ய முனைந்து நிற்க வேண்டும்.

தார்மீகம் அர்த்தமுள்ளதாய் ஆரோக்கியம் அடையட்டும்.

அன்புடன் ஆசிரியர்

# க. பொ. த. உயர்தர மாணவர்களுக்கான
# பொது சாதாரண பரீட்சைக்குரிய வினாக்கள்

2000ம் ஆண்டு தொடக்கம் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சையுடன் நடைபெறவுள்ள பொது சாதாரணப் பரீட்சைக்கு (பொது அறிவு) வழிகாட்டியாக கல்வி, உயர்கல்வி அமைச்சும், பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவும் இணைந்து வெளியிட்ட மிக முக்கியமான வினாக்கள் எமது மாணவர்களின் நன்மை கருதி இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

(இம்மாதம் 11ம்,13ம் திகதிகளில் வலம்புரியில் வெளியான வினாக்களின் தொடர்ச்சி)

### பொது முடிபுகளுககு வருதல்:-

இங்கு யாதாயினும் ஒரு சந்தர்ப்பம் தொடர்பாகத் திருத்தமான பொது முடிபுக்கு வருவதற்கு ஒருவரிடம் ஆற்றல் இருக்கின்றதாவென ஆராய்ந்து பார்க்கப்படும். பெரும்பாலும் விடயங்களை ஆராயாமல் ஒருதலைப்பட்சமாக முடிவுகளுக்கு வருதல் சிலருடைய வழக்கம். ஆயினும் அவ்வாறு நடைபெறக்கூடாது. சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான காரணிகளைக் கருத்திற்கொண்டு பொது திருத்தமான முடிவுகளுக்கு வருவதற்கு மாணவர்கள் பரிச்சயமாயிருத்தல் வேண்டும். அவ்வாற்றலை அளவிடத்தக்க ஓர் உதாரணம் கீழே தரப்பட்டுள்ளது.

**உதாரணம்:-**

23. காலநிலை விலங்குகளின் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்துகின்றதா என ஆய்வுசெய்த அவ் விஞ்ஞானி ஒவ்வாத காலநிலைகளைக் கொண்ட இரு மாகாணங்களில் வளர்க்கப்பட்ட ஒரே பெண் நாயின் இரு குட்டிகளில் ஒன்று மற்றையதிலும் பார்க்க மிக விரைவாக உடல் வளர்ச்சியைக் காட்டுவதாகக் கண்டார். ஒத்த நிலைமைகளில் இவ்விரு நாய்க் குட்டிகளையும் வளர்ப்பதற்கு முயன்ற போதிலும் அவற்றின் உடல் வளர்ச்சியின் வீதத்தில் வேறுபாடு காணப்பட்டது. இதன் தொடர்பாக வரத்தக்க முடிவுகள் சில பின்வருவனவாகும்.

· இரு நாய்க் குட்டிகளும் வளர்க்கப்பட்ட வீடுகளில் உள்ள குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கைகளுக்கிடையே வேறுபாடு இருக்கலாம்.

B. இரு நாய்க் குட்டிகளும் உணவு கொடுத்த வேளைகளில் எண்ணிக்கையில் வேறுபாடு இருக்கலாம்.

C. இரு நாய்க் குட்டிகளினதும் தோலின் நிறத்தில் வேறுபாடு இருக்கலாம்.

D. இரு நாய்க் குட்டிகளுக்கும் கிடைத்த உணவிலும் பானத்திலும் உள்ள போசணைப் பதார்த்தங்களில் வேறுபாடு இருக்கலாம்

E. இரு நாய்க் குட்டிகளும் வளர்க்கப்பட்ட வீடுகளின் இடவசதியில் வேறுபாடு இருக்கலாம்.

இம்முடிவுகளில் இரு நாய்க் குட்டிகளினதும் உடல் வளர்ச்சி வீதத்தில் உள்ள வேறுபாட்டிலே செல்வாக்குச் செலுத்தியனவாக முடிவு செய்யத்தக்க காரணிகளைக் கொண்ட விடையைத் தெரிந்தெடுக்க.

(1) AC (2) BD (3) CE (4) AB (5) ED

### ● சாதாரண பொதுமையாக்கல்களின் பிரயோகம்

பொதுமையாக்கலின் பிரயோகம் என்பது மாதிரித் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அதிலும் பார்க்கப் பெரிய குடித்தொகை தொடர்பாக முடிவுகளுக்கு வருதலாகும்.

**உதாரணம்:-**

26. யாதேனும் ஒரு நாட்டிலே ஆரம்பக் கல்வியைப் பூர்த்திசெய்யும் மாணவர்களின் கணித அறிவு மட்டம் பற்றிய ஆய்வில் ஈடுபட்ட ஒருவருக்கு ஐந்து மாகாணங்கள் தொடர்பாகப் பின்வரும் தகவல்கள் கிடைத்தன.

மாகாணம் A யில் தரம் 5 ஐப் பூர்த்திசெய்யும் மாணவ மாதிரியின் சராசரிப் புள்ளி 48 ஆகும்.

மாகாணம் B யில் தரம் 5 ஐப் பூர்த்திசெய்யும் மாணவ மாதிரியின் சராசரிப் புள்ளி 55 ஆகும்.

மாகாணம் C யில் தரம் 5 ஐப் பூர்த்திசெய்யும் மாணவ மாதிரியின் சராசரிப் புள்ளி 50 ஆகும்.

மாகாணம் D யில் தரம் 5 ஐப் பூர்த்திசெய்யும் மாணவ மாதிரியின் சராசரிப் புள்ளி 55 ஆகும்.

மாகாணம் E யில் தரம் 5 ஐப் பூர்த்திசெய்யும் மாணவ மாதிரியின் சராசரிப் புள்ளி 49 ஆகும்.

இதற்குஏற்ப முழு நாட்டிலும் ஆரம்பக் கல்வியைப் பூர்த்திசெய்யும் மாணவர்களின் கணித அறிவு தொடர்பாக வரத்தக்க மிகப் பொருத்தமான முடிவு யாது?

(1) கணித அறிவுக்கான சராசரிப் புள்ளி மிக உயர்ந்த மட்டத்தில் இருக்கின்றது.
(2) கணித அறிவுக்கான சராசரிப் புள்ளி மிகத் தாழ்ந்த மட்டத்தில் இருக்கின்றது.
(3) கணிதத்திற்கான சராசரிப் புள்ளி 48 இற்கும் 55இற்குமிடையே இருக்கும்.
(4) கணிதத்திற்கான சராசரிப் புள்ளி மற்றைய பாடங்களுக்கான சராசரிப் புள்ளிகளிலும் பார்க்கக் குறைவாக இருக்கின்றது.
(5) கணிதத்திற்கான சராசரிப் புள்ளி எப் பெறுமானத்தை எடுக்கின்றதென முடிவுசெய்ய இயலாது.

### ● கூற்றுகள் கருத்துகள் ஆகியவற்றை விமர்சனரீதியில் மதிப்பிடல்

யாதேனும் ஒரு கூற்றின் அல்லது கருத்தின் பொருத்தப்பாடு செம்மை, முடிவு அக்கூற்றின் பொருந்தும் ஒத்த வேறு கூற்று அல்லது கருத்து ஆகியவற்றை இனங்காணும் ஆற்றல் இங்கு மதிப்பிடப்படும் அத்தகைய ஒரு கூற்றுக்கான உதாரணம் கீழே தரப்பட்டுள்ளது.

**உதாரணம்:-**

24 பின்வரும் கூற்றின் கருத்தை ஒத்த கருத்தை தரும் கூற்றைத் தரப்பட்ட விடைகளிலிருந்து தெரிந்தெடுக்க.

வரட்சி அதிகரிக்கிறது நீர்த்தட்டுப்பாடு உக்கிரமாகிறது.

(1) இரக்கம் அதிகரிக்கிறது நிவாரணம் ஆரம்பிக்கிறது.
(2) மழை பெய்கிறது, ஆறு நிரம்புகிறது.
(3) உலகம் மாறுகிறது, சுகம் பிறக்கிறது.
(4) சேவல் கூவுகின்றது, சூரியன் உதிக்கிறது.
(5) ஆகாயம் மேலே, தரை கிழே.

### ● யாதேனும் ஒரு தர்க்கம் தொடர்பாகக் கிடைக்கும் மேலதிக தகவல்களின் செல்வாக்கை மதிப்பிடல்

இவ்வாற்றலின் கீழ் யாதாயினும் ஒரு தர்க்கத்தை அல்லது கருத்தை நிறுவுவதற்குப் பயன்படுத்தத்தக்க வேறு மேலதிக தகவல்களினதும் காரணிகளினதும் பொருத்தப்பாட்டை முடிவுசெய்யும் ஆற்றல் பரீட்சிக்கப்படும்.

**உதாரணம்:-**

25 புகைத்தல் உடலுக்குப் பாதகமானது என்பதை அறிந்திருந்தும் மனிதர்கள் கொண்ட பழக்கத்தைக் கைவிடத் தயங்குகின்றமையால் புகைக்கின்றனர்.

இத்தர்க்கத்தில் காட்டப்பட்டுள்ள கருத்தைப் பின்வருவனவற்றில் எது மேலும் உறுதிப்படுத்துகின்றது?

(1) பழகப் பழகப் பாலும் புளிக்கும்
(2) முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
(3) தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்.
(4) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
(5) தினை விதைத்தவன் தினை அறுப்பான். வினைவிதைத்தவன் வினை அறுப்பான்.

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

இளஞ்சுடர் இளைஞர் கழக வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை மாலை 4.00 மணிக்கு கழகமண்டபத்தில் தலைவர் அ. பிரதீபன் தலைமையில் நடைபெறும்.

(சு)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழக உறுப்பினர்கள், பழைய மாணவர்களுக்கான கூட்டம்இன்றுபி.ப.4மணிக்கு மண்டபத்தில் கழகத் தலைவர் குலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் சகல பழைய மாணவர்களையும் உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கழகச் செயலாளர் கேட்டுள்ளார்.

## அம்பாறையில் இரு இராணுவம் பலி

(மட்டுநகர்)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்திலுள்ள கோணாகலைப் பிரதேசத்திலுள்ள இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நேற்றுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இத்தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் ஒரு இராணுவச்சிப்பாய் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இராணுவத்தினரின் ஆயுதங்களை விடுதலைப் புலிகள் அபகரித்துச் சென்றுள்ளனர்.

## கொழும்பில் சுற்றி வளைப்பில் 21 பேர் இன்னமும் தடுத்து நிறுத்திவைப்பு

(கொழும்பு)

கடந்தவாரம் கொழும்பில் இடம்பெற்ற சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்ட 1500 பேரில் இன்னமும் 21 பேர் மட்டுமே சந்தேகத்தின் பேரில் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவவுக்கு அறிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக சில சிங்களப்பத்திரிகைகள் 315 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள் செய்திகளில் எவ்வித உண்மையுமில்லை என்றும் அதுதவறானது. எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(க.70)

## மரக்கறி விலை உயர்வு

மரக்கறிகளின் விலைகள் அண்மை நாட்களாக உயர்வடைந்துள்ளது. திருநெல்வேலி மருதனார்மடம் மற்றும் கல்வியங்காட்டுச் சந்தைகளிலேயே மேற்படி மரக்கறிகள்உச்ச விலைக்கு விற்கப்படுகின்றன, கத்தரிக்காய் 60 ரூபா விற்கும் பயற்றங்காய் 40 ரூபாவிற்கும் பூசணிக்காய் 25 ரூபாவிற்கும், பச்சைமிளகாய் 120 ரூபாவிற்கும் விற்கப்படுகின்றன.

## திருட்டு

வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபரின் அலுவலகத்தை உடைத்துக்கொண்டு உட்புகுந்த திருட்டுக் கோஷ்டியினர் அலுவலகத்திலிருந்த மாணவர்களின் கல்வி உபகரணங்களை கொள்ளையடித்துள்ளனர்

[52[

# வெடிச்சத்தத்தைத் தொடர்ந்து மோட்டார் சைக்கிளுடன் விழுந்தார்

## பரு. நகரசபைத் தலைவரின் மரண விசாரணையில் சாட்சி

நேற்று முன்தினம் சுட்டுக் கொள்ளப்பட்ட பருத்தித் துறை நகரசபைத் தலைவர் வ, விஜயரத்தினத்தினதும் ஊழியர் முதலி பகிரதனினதும் மரணவிசாரணைகள பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் நேற்று நடைபெற்றது விசாரணையின் போது உழவு இயத்திரச் சாரதி ஆறுமுகம் உதய சூரியன் (வயது 37) நகரசபை காவலாளி ஆகியோர் சாட்சியமளித்தனர்

பருத்தித்துறை குற்றத் தடுப்பு பொலிஸ் — அதிகாரி எஸ். கமகே சாட்சியங்களை நெறிப்படுத்தினார்

உழவு இயந்திரச் சாரதி ஏ. உதயசூரியன் தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது

சம்பவதினம் மாலை 6.30 மணியளவில் நான் நெல்லியடியில் வீடியோ கசற் எடுத்து வந்தேன் அப்போது மெக்கானிக்கிடம் சென்று வருமாறு தலைவர் என்னை பணித்தார்.

நான் மெக்கானிக்கிடம் சென்று வந்தபோது சிவன் கோவிலடியிலுள்ள மெத்தைகடைச்சந்தியில் தலைவரும் பகீரதனும் சைக்கிளில்வந்து கொண்டிருந்தனர்.

நான் மோட்டார் சைக்கிளை அவர்களிடம் கொடுத்தபோது அவர்கள் தாம் வந்த சைக்கிளை என்னிடம் தந்தார்கள். இறந்த பகிரதனின் சைக்கிள் நகரசபை அலுவலகத்தினுள் நின்றது. அதனை எடுப்பதற்கு பகிரதனையும் ஏற்றிக் கொண்ட தலைவர் அலுவலகத்துக்குச் சென்றார்.

மின் தடையால் அந்நேரம் இருட்டாகவே இருந்தது. மோட்டார் சைக்கிள் வெளிச்சத்தின் பின்னால் நானும் அவர்களுடன் சென்றேன்.

அலுவலகத்தின் முன்னால் அவர்கள் நின்ற போது நானும் எனது சைக்கிளில் அங்கு சென்றடைந்தேன். அப்போது பட படவென வெடிச்சத்தமும், மின்னல் வெளிச்சமும் தெரிந்தது. இருட்டாகையால் குண்டு வந்த திசை தெரியவில்லை.

சத்தம் கேட்ட கையுடன் தலைவர் மோட்டார் சைக்கிளுடன் கீழே விழுந்தார். எரியுது எரியுது எனக் கத்தியவாறு பகீரதனும் கீழே விழுந்தார். அப்போது உதவிக்கு அருகில் யாரும் இருக்கவில்லை.

நான் தலைவரின் வீட்டுக்கு ஓடிச்சென்று விடயத்தைக் கூறி அவர்களைவும் கூட்டி வந்து அவர்களின் உதவியுடன் இருவரையும் காரில் ஏற்றி மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றேன் எனக் கூறினார்.

தொடர்ந்து விசாரணையை மேற்கொண்ட பருத்தித்துறை பதில் நீதவான் திரு பா. சுப்பிரமணியம் இருவரினதும் மரணம் கொலையெனத் தீர்ப்பளித்தார்.

### பருத்தித்துறை...

வைத்திய சாலைப் பிரேத அறையில் இவ்விருசடலங்களும் வைக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை நகரசபைத் தலைவரின் பூதவுடலுக்கு பொதுமக்கள் அஞ்சலி செலுத்திய பின்னர் வ.விஜயரத்தினத்தின் சொந்த இடமான வவுனியாவுக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

### விஜயரத்தினத்தின் ---

ஒரு காயமுமாக நான்கு காயங்கள் ஏற்பட்டுள்ளன.

பகிரதனுக்கு நெஞ்சுப் பகுதியில் மாத்திரம் ஒரு காயம் ஏற்பட்டுள்ளது. இக்காயம் சுவாசப்பையைக் கிழித்துச்சென்றுள்ளது.

விஜயரட்ணத்தின் தோள் மூட்டிலுள்ள காயத்திலிருந்து 9 எம். எம். பிஸ்ரல் குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இராணுவக்..,

யுறுத்திக் கூறியுள்ளார்.

இதே வேளை வன்னிப் பிரதேசங்களில் உள்ள மல்லாவி, முழங்காவில், புதுக் குடியிருப்பு ஆகிய இடங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளில் மருந்துக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுவதாகவும் பெரும்பாலும் விஷக்கடிக்கு பயன்படுத்தப்படும் மருந்துகளுக்கே தட்டுப்பாடு நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க வன்னிப் பிரதேசங்களில் பணத்துக்கும் பெருமளவு தட்டுப்பாடு நிலவுவதனால் பணப்புழக்கம் குறைவாகக் காணப்படுகிறது.

ஓய்வூதியம் பெறுபவர்களின் ஓய்வூதியம் வழங்கப் போதிய பணம் இல்லாமையால் அங்குள்ள மக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சாரதாம்பாள்--.

மேற்கொள்ள வேண்டுமென்றும் கிருசாந்தி குமாரசுவாமி கொழும்பு காக்கைதீவில் கொல்லப்பட்ட நீற்றா ஆகியோரின் கொலை வழக்குகளைவிசாரித்தது போன்று சாரதாம்பாளின் வழக்கும் விசாரிக்கப்பட வேண்டுமென்று கேட்டுள்ளார்.

### வவுனியா,..

மகன் ஒருவரும் சிக்கிப்பலியானார். இவரது சடலம் வவுனியா ஆஸ்பத்திரியில் அடையாளம் காணும் பொருட்டு வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வவுனியா மன்னார் வீதியிலுள்ள குழுமாட்டுச் சந்தியில் நேற்றுக் காலை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இரு சடலங்கள் காணப்பட்டது. இச் சடலம் குழுமாட்டுச் சந்தியில் அழகு சாதனப் பொருட்கள் விற்பனை செய்து வருபவரான தம்பிராசா வில்வராசா (வயது 29), ஜெயவீரசிங்கம் பத்திராசா ஆகிய இருவருடையதுமென இனங் காணப்பட்டது.

### மக்கள்...

உள்ளவர்களுக்கே முன்னுரிமை அளிக்கவுள்ளோம் இவ்வாறான செயற்திட்டங்களின் மூலமே வர்த்தக சமூகத்தினர் தங்களுச்கும் சமூகத்திற்கும் உள்ள இடைவெளியைக் குறைக்க முடியும்.

இனப்பிரச்சினைக்குத்தீர்வு காண்பதற்கு தங்களால் முடிந்தளவிற்கு வர்த்தக சமூகத்தினர் முயற்சிகளை மேற் கொண்டு விட்டனர். இனிமேல் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்குத் தேவையான உரிய முயற்சிகளை அரசியல் வாதிகளே மேற் கொள்ள வேண்டும். என்றும் மேலும் அவர் தெரிவித்தார்.

(05)

### அரசின்...

டிய பொறுப்பு அரசாங்கத்திடமேயுள்ளது. அரசாங்கத்தினால் வழங்கக் கூடிய அதி உச்சத் தீர்வுத் திட்டத்தை இனங்கண்டு அதற்கான அரசின் சம்மதத்தையும் பெற்ற பின்பே சர்வமதக்குழு விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும்.

அரசிடம் தீர்வு பற்றிய தெளிவின்மை நிலவும் போது விடுதலைப்புலிகளுடன் மட்டும் பேச்சுவார்த்தை நடத்துவதால் தமிழ் மக்களின் பிரச்சனைக்கு நிலையான தீர்வைக் கண்டுவிட முடியாது.

இவ்வாறு ஆயர் இராயப்பு ஜோசப் அடிகளார் மேலும் தெரிவித்தார்.

# களுத்துறைச் சிறைச்சாலை மோதல்: ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டோர்

களுத்துறைச் சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதலின் போது படுகாயமடைந்து கொழும்பு மற்றும் நாகொட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள 42 தமிழ்க் கைதிகளின் பெயர்விபரத்தை சிறைச்சாலை தலைமையகம் இ. தொ. கா. எம். பி இரா. யோகராஜனுக்கு அனுப்பி வைத்துள்ளது.

அவர்களின் பெயர் விபரம் வருமாறு.

சிவநாதன் கிஷோர் (வயது 37) வவுனியா, இராமச்சந்திரன் சிவகுமார் (வயது 25) தமிழ் நாடு, பாலராஜா ஜெகதீஸ்வரன் (வயது 27) மாங்குளம், நயினாமுகமது அஸீஸ் (வயது 25) புத்தளம், பழனி முத்து குலசேகரம் வயது 25) கொடகல, வீரத்தம்பி விநாயகமூர்த்தி (வயது 30) கரவெட்டி. யாழ், நந்தகோபால் ஜீவன் (வயது 22) கொக்குவில், யோகன் முரளிதரன் (வயது 29) கொழும்பு, கிட்ஷ்ணன் முருகானந்தன் (வயது 33) புத்தூர், செல்லையா கேதீஸ்வரன் (வயது 25) வவுனியா, சந்திரசேகரன் ரட்ணசேகரம் (வயது 30) கிளிநொச்சி, என்.கெ ஸ்ரீ தரன் (வயது 42) சுண்டுக்குளி,

சோமசுந்தரம் சிவனேஸ்வரன் (வயது 43) ரத்மலான வெற்றிக்குமார் சந்திரகுமார் (வயது 36) திருகோணமலை, ஏ. நடராஜசிங்கம் (வயது 30) வவுனியா, அச்சுதபிள்ளை பாலச்சந்திரன் (வயது 29) யாழ்ப்பாணம், ஜெகதீஸ் சாள்ஸ் எட்வேட் (வயது 27) மூதூர் பரமலிங்கம் மோகனதாஸ். (வயது 27) வவுனியா, குருசாமி கோவில்நகர்.

செல்வம் (வயது 27) விஸ்வமடு, சுந்தரி சந்திரகுமார் (வயது 19) சாவகச்சேரி, டக்ளஸ் ஜெனோ (வயது 21) யாழ்ப்பாணம், சுந்தையா சிவவடிவேல் (வயது 33) வவுனியா, கணேசநாதன் கிரிசாந்தன் (வயது 22) ஆணைக்கோட்டை, சிவலிங்கம் குகநாதன் (வயது 34) கண்டி, சபாரட்ணம் சசிகுமார் (வயது 25) வவுனியா, எட்வட் ஜோன்சன் [வயது 23] மன்னார், செல்வமகேந்திரன் ஆனந்தரூபன் [வயது 17] மன்னார், ஸ்ரீஸ்கந்தராஜா ஸ்ரீ கணேசன் [வயது 21] கொடிகாமம், கதிரவேலு ஹட்சன் [வயது 28] நீர் கொழும்பு, சண்முகராஜா தர்மலிங்கம் [வயது 47] வவுனியா, சுப்பிரமணியம் கந்தசாமி [வயது 23] இம்புலுப்பிட்டிய, ஆறுமுகம் பாலசுப்பிரமணியம் [வயது 31] பன்வில, சுப்பிரமணியம் கேதீஸ்வரன் [வயது 32] அட்டன்,

செல்ஸ் சேட்டன் சுரேஸ் [வயது 21] குருநகர், சபாபதி சந்திரமோகன் [வயது 21] புத்தளம், சுப்பிரமணியம் ஏகாம்பரம் [வயது 45] மன்னார், செல்லையா ராஜ்குமார் [வயது 29] காலியல, ஜோன் கெனடி [வயது 32] வவுனியா, மாணிக்கம் ரட்ணேஸ்வரன் [வயது 31] முல்லைத்தீவு, தாசியஸ் சூட்ஜெஸ்வரன் [வயது 23[ வவுனியா, பாலகிருஷ்ணன் கிருஸ்ணபாலன் [வயது 28] வவுனியா, பரமலிங்கம் பரமேஸ்வரன் (வயது 25) காரை

(05-வ)


உ

## வடபிராந்திய இந்துப் பேரவை

சமாதானம் அமைதிவேண்டி

## தைத்திருநாள் பிரார்த்தனையும் கோ பூஜையும்

தலைமை: கலாபூஷணம் ப. சந்திரசேகரம்

இடம்: ''அன்பகம்'' மானிப்பாய் வீதி, (ஆறுகால்மடம்) ஆனைகோட்டை

காலம்: 16-01-2000 ஞாயிறு பிற்பகல் 2.00 மணி (புதிய நேரம்)

ஆசியுரை: சிவஸ்ரீகை. திருஞானசம்பந்தக்குருக்கள் (கரணவாய்)

''தைத்திருநாள் நற்சிந்தனை'': சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் அவர்கள்

''புத்தாயிரம் ஆண்டில் இந்துக்கள்'' சிவத்திரு ப. சிவலோகநாதன் அவர்கள் (செயலாளர் வ. பி. இ. பே.)

''தமிழ்த்திருநாள் தைப்பொங்கல்'' திரு. கோ. சி. வேலாயுதம் அவர்கள் (முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர்)

கோபூசையும், தைத்திருநாளும்: பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன் அவர்கள் (தலைவர் இந்துநாகரீகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!

சிவத்திரு ந. நவரத்தினம்
நிர்வாக செயலாளர்.

சிவ. ஆறுமுகசாமி J. P.
அமைப்பாளர்

நிகழ்ச்சி சிறப்புற வாழ்த்துகிறோம்

தரமான பாடசாலைச் சின்னம், கீற்ரேக், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகை ஆகியவற்றைச் செய்திட

எஸ். எஸ். யசோதரன் ஆட்ஸ்

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(வின்சர் தியேட்டர் முன்பாக)

(00105)


## மரண அறிவித்தல்

### அழகையா ஸ்ரான்லி சத்தியநாதன்

(இளைப்பாறிய சிறைச்சாலை உத்தியோகத்தர்)

கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மானிப்பாய் அதிகார் செல்லமுத்து வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய அழகையா ஸ்ரான்லி சத்தியநாதன் (இளைப்பாறிய சிறைச்சாலை உத்தியோகத்தர்) 13-01-2000 அன்று காலமாகிவிட்டார். இவர் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அழகையா செல்லம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களாகிய விஸ்வலிங்கம், இராசம்மாவின் மருமகனும், பாக்கியநாதன், பத்மநாதன், பரமநாதன், செல்வி, செல்வராணி, பவாச்சி, ரூபி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற நாகம்மா, அம்பிகை, காலஞ்சென்ற சுப்பிரமணியம், சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார், அன்னாரின் ஈமைக்கிரியைகள் 16-01-2000 ஞாயிறு காலை 10-00 மணியளவில் நல்லடக்க ஆராதனை நடைபெறும்.

தகவல்

அதிகார் செல்லமுத்து வீதி,
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.

சரோஜினிதேவி
(மனைவி)

00102


அச்சகத்தினற்கு தங்களுக்குத் தேவையான பிறிசிம் சகல கலர் மை வகைகளும் விற்பனைக்குண்டு

தொடர்பு;

தயா அச்சகம்

(மனோகரா தியேட்டர் அருகில்)
138, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

00103


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும்விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000- ஆண்டு ஜனவரி மாதம் 16ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.